**செய்தி வெளியீடு எண்: 05/10/2020** **நாள்: 22.10.2020**

**பத்திரிக்கைச் செய்தி**

**விடுமுறை நாட்களை ஒட்டி சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் நீட்டிக்கப்படுகின்றன**

சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் காலை 07.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை இயக்கப்பட்டு வருகின்றன. பண்டிகை விடுமுறையையொட்டி நாளை (23.10.2020) வெள்ளிக்கிழமை மற்றும் 24.10.2020, சனிக்கிழமை ஆகிய நாட்களில் காலை 07.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை இயக்கப்படும் மெட்ரோ இரயில் சேவைகள் இரவு 11.00 மணி வரை நீட்டிக்கப்படுகிறது.

விடுமுறை முடிந்து திரும்பி வரும் பயணிகளின் வசதிக்காக 27.10.2020, செவ்வாய்க்கிழமை அன்று காலை 07.00 மணி முதல் இயக்கப்படும் மெட்ரோ இரயில் சேவைகள் காலை 05.30 மணி முதல் இரவு 09.00 மணி வரை இயக்கப்படும்.

தொடர் விடுமுறை காரணமாக 29.10.2020, வியாழக்கிழமை அன்று காலை 07.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை இயக்கப்படும் மெட்ரோ இரயில் சேவைகள் இரவு 11.00 மணி வரை நீட்டிக்கப்படுகிறது.

விடுமுறை முடிந்து திரும்ப வரும் பயணிகளின் வசதிக்காக 02.11.2020, திங்கட்கிழமை அன்று காலை 07.00 மணி முதல் இயக்கப்படும் மெட்ரோ இரயில் சேவைகள் காலை 05.30 மணி முதல் இரவு 09.00 மணி வரை இயக்கப்படும்.

நீட்டிக்கப்பட்ட நேரங்களில் மெட்ரோ இரயில் சேவைகள் உச்ச நேரம் (Peak Hours) இல்லாமல் இயக்கப்படும்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**